2012 மே 4]

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுசெய்து தடுப்பு வேலி அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10-45

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்களுடைய வாழ்நாள் கனவாகிய சொந்த வீடுகள் 36,000 கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதேபோல வனத் துறையிலே பணியாற்றுகின்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள், அதற்குத் தனியாகக் கேள்வி போடுங்கள். தயவு செய்து உட்காருங்கள்.

வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

210—

ஏற்றுமதி மையம்

***6576—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கிரானைட் கற்கள் மற்றும் வெள்ளைப் பாறைகள் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2012 மே 4

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கிரானைட் கற்கள் மற்றும் வெள்ளைப் பாறைகள் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை. சுரங்கக் குத்தகை பெற்று கிரானைட் கற்கள் உற்பத்தி செய்யும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஏற்றுமதி மையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி மிக வறட்சியான பகுதி. நிலப்பரப்பு அதிகமாகக் கொண்ட பகுதி. அதிலே மூன்றில் ஒரு பங்கு மலைகள் நிறைந்து இருக்கின்றன. அந்த மலைகளிலே கிரானைட்டும் பாறைகளும் மிக அதிகமாக உள்ளன. அங்கு தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. பக்கத்தில் ஆந்திரா இருக்கிறது. அங்கு கிரானைட் தொழில் நடக்கிறது. பள்ளிப்பட்டை அடுத்த சோளிங்கர் பகுதியிலும் கிரானைட் வெட்டியெடுக்கப்பட்டு அங்கு அந்தத் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய ஒரு பாடலில் 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்று சொல்லி இருக்கிறார். கனிம வளம் நிறைந்த திருத்தணி தொகுதியிலே அந்த கிரானைட் பாறைகளைச் சரியாகப் பயன்படுத்தி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களை அடிக்கடி கோடிட்டுக் காட்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சில பாடல்கள்தான் பிடிக்கும் போலிருக்கிறது. 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற பாடல் அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், 'நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்' என்று பாடினால் மட்டும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்று அவர்கள்தான் விளக்கம் கூற வேண்டும். (குறுக்கீடுகள்)*

2012 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள், வினாக்கள்-விடைகள் நேரமிது. கொறடா, தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்தான் இந்தக் கேள்வி கேட்டிருக்கிறார். அவர்தான் அந்தப் பாடலைக் குறிப்பிட்டார். திரு. மு. அருண் சுப்பிரமணியன் நீங்கள் பேசுங்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பை மனதில் கொண்டும், அரசுக்கு கூடுதல் வருமானம் வருவதை மனதில் கொண்டும் இப்படிப்பட்ட கிரானைட் வளத்தைச் சரியாகப் பயன்படுத்தி அங்கு தொழிற்சாலைகளையும் ஏற்றுமதி மையங்களையும் ஏற்படுத்தினால் ஒரு நாடு வளமாகும், முன்னேற்றமடையும். பள்ளிப்பட்டு பகுதியிலே திருத்தணி தொகுதியிலே இருக்கின்ற கிரானைட் கற்களைப் பயன்படுத்தி ஒரு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற மணலியிலே அந்த ஏற்றுமதி நிலையம் இருக்கின்றது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்குத் தேவையான கற்கள் எல்லாம் உங்கள் மாவட்டத்தில் இருந்துதான் வந்து பாலிஷ் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருத்தணியிலே ஒரு ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். அப்படி ஒரு நிலையம் அமைப்பதற்கு 35 கோடி ரூபாய் ஆகும். நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.